[2012 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 500 கார்டுகளுக்கும் குறைவாக இருக்கிற கடைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார். அந்தக் கடை அமைகின்ற இடத்தில் இருக்கின்ற கார்டுகள் குறைவாக இருந்தாலும், அந்தக் கடையைத் திறக்க வேண்டும்; அது அமைந்தால்தான் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கருதினால், அந்தக் கோப்பு அரசுக்கு அனுப்பப்படும்பட்சத்தில், அரசுத் துறை சார்பாக கூட்டுறவுத் துறையும், உணவுத் துறை ஆணையாளர் அவர்களும் அதைப் பரிசீலித்து, உறுதியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

44—

தடுப்பணை

*__1544—திரு. ந. நஞ்சப்பன்:__

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சின்னாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, ஏரிகளுக்கு நீரைத் திருப்பி விடுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சின்னாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி ஏரிகளுக்கு நீரைத் திருப்பி விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார். அந்த மாதிரி ஒரு திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, சின்னாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, மறைமுகப் பாசன வசதியை ஏற்படுத்தும் திட்டம் குறித்து ஆய்வு செய்ய

2012 ஏப்ரல் 4]

நடப்பாண்டு திட்ட இலக்கில் சேர்க்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

கால்நடைக் கிளை மருத்துவமனை

***5619—திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, பாப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு குறைந்தபட்சம் அந்தக் கிராமத்திலிருந்து சுற்றுப்புறக் கிராமங்கள் வரை 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும் என்ற விதியும், 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக வேறு கிளை நிலையம் இருக்கக் கூடாது என்ற விதியும் உள்ளது. அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பெத்தநாயக்கன்பாளையம், பாப்பநாயக்கன்பட்டி கிராமங்களிலே 1,300 கால்நடைகள் மட்டுமே உள்ளன. எனவே, அங்கு கிளை நிலையம் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வருங்காலங்களில் அங்கு கால்நடைகள் எண்ணிக்கை 3,000 ஆக உயரும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு அம்மாவின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.